[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி, கேரள அரசு தெரிவித்துள்ள மாற்று வரைவின் மீது சட்ட வல்லுநர்களின் கருத்துப் பெறப்பட்டு மறு பரிசீலனை செய்யப்பட்டது.

8. பவானிப் படுகை, காவிரி நதிநீர்ப் பிரச்சினையோடு இணைக்கப்பட்டுள்ளதால், பவானியை இணைக்காமல் பாண்டியாறு-புன்னம்புழா நீரின் திட்டத்தின் நீரை திருப்பிவிடுவதற்கான சாத்தியக்கூறுகளின் மீது தீர்வு காணவேண்டுமென்ற தமிழகத்தின் கருத்திற்கு கேரள அரசின் இசைவை பெற்றுத் தருமாறும், காவிரி நதிநீர்ப் பிரச்சினையுடன் இணைக்காது மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகின்ற பாண்டியாறு-புன்னம்புழா ஆற்று நீரை பாசனத்திற்காக கிழக்கு நோக்கித் திருப்பிவிடப்படும் மாற்றுத் திட்டத்தைக் குறித்து மேலும் பேச்சுவார்த்தை தொடர ஏற்பாடு செய்யுமாறும் கேரள மாநில சக்தி மற்றும் பன்மாநில நீர்த்துறைச் செயலாளரைக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதுகுறித்து, கேரள அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

9. மேலும், இப்பொருளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு தமிழக மற்றும் கேரள மாநில அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம் என இவ்வரசு உத்தேசித்துள்ளது.

6. அறிக்கை அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

Thiru T. VENKATA REDDY : Sir, On behalf of the Chairman, Committee on Public Accounts, I present the following Reports of the Committee on Public Accounts :

Sixty-First Report of the Committee on the action taken by the Government on the recommendations contained in tht Sixteenth Report (Seventh Assembly) of the Committee on Public Accounts (1980-82) on the paragraphs pertaining to certain Departments in the Accounts of the Government of Tamil Nadu for the year 1976-77 and the Report of the Comptroller and Auditor-General of India for the year 1976-77 (Civil).

வளர்ப்பு ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1987 ஏப்ரல் 10]

Sixty-second Report of the Committee on the further action taken by the Government on the recommendations contained in the Twenty-fourth Report (Seventh Assembly) and Eighth Report (Sixth Assembly) of the Committee on Public Accounts on the Accounts of the Government of Tamil Nadu for the year 1973-74 and the Report of the Comptroller and Auditor-General of India for the year, 1973-74 (Civil).

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1986-87 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கையை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

7. வரவு செலவுத் திட்டம், 1987-88 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 21 மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,94,29,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

(முற்பகல் 11-30)

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைபூண்டி தொகுதியில் தொண்டக்காடு, கரையான் காடு, இடும்பவனம், கற்பகநாதர் குளம், தில்லை விளாகம் இந்தப் பகுதியில் உள்ள மீனவர்களுக்கு கடலில் சென்று மீன் பிடிக்க மானிய விலையில் வலைகள் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானிய கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,94,29,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் அணைக்கரையில் மீன்

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,94,29,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."